மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 20 செவ்வாய்க்கிழமை 07.101.2023 அதிர்வு 99

இணையப் பாதுகாப்பு சட்டமூலம்:

## உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் அறிவிப்பு



நிகழ்நிலைக் காப்பு (இணையப் பாதுகாப்பு) சட்டமூலத்தின் சில சரத்துக்கள் நாடாளு 04

# கிரிக்கெட் விளையாட்டுடன் எவரும் சூழ்ச்சியாட இடமளிக்கவே முடியாது

## நாடாளுமன்றில் சஜித் திட்டவட்டம்

"இலங்கையில் 220 இலட்சம் மக்களின் மனதில் குடிகொண்டுள்ள கிரிக்கெட் விளையாட்டுடன் நிறைவேற்று அதிகாரம், சட்ட மன்றம், நீதித்துறை, திருடர்கள் மற்றும் இலஞ்ச, ஊழல் மோசடிக்காரர்கள் சூழ்ச்சியாடுவதற்கு இடமளிக்க முடியாது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இடைக்கால கிரிக்கெட் குழுவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். 04



இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு

## 14 நாள்களுக்கு தடை உத்தரவு!



அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழுவை நியமிப்பது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலைச் சவாலுக்கு உட்படுத்தி இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட 04

புதுமாத்தளன் பகுதியில்

## கரையொதுங்கிய கஞ்சா பொதிகள்!

பொலிஸார் தீவிர விசாரணை

(சண்முகம் தவசீலன்)

புதுமாத்தளன் கடற்கரையில் கஞ்சா பொதிகளைக் கைப்பற்றிய முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 04



காரைநகரில் கடற்படை வேட்டை

## 137 கிலோ கஞ்சாவுடன் 3 சந்தேகநபர்கள் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது இன்று அதி காலை 137 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. 04

# நயினாதீவு நாக விகாரையில் சீனத் தூதுவர்; உணவுப் பொதிகளையும் வழங்கி வைத்தார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கிஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் இன்று நயினாதீவுக்கு விஜயம் செய்தனர். இதன்போது சீன அரசின் உலர் உணவுப் பொதிகளையும் மக்களுக்கு அவர்கள் வழங்கி வைத்தனர். 04





# நயினாதீவு நாக விகாரையில் சீனத் தூதுவர்; உணவுப் பொதிகளையும் வழங்கி வைத்தார்









(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)



# தகுதியான ஒருவர் விரைவில் பொலிஸ்மா அதிபராக நியமனம்

**முன்னாள் எம்.பி. ஆஷு மாரசிங்க தெரிவிப்பு**



விரைவில் தகுதியான ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கே பூரண அதிகாரம் இருக்கிறது.

ஜனாதிபதி பெயர் குறிப்பிட்டு அரசமைப்புப் பேரவைக்கு அனுப்பும் நபர்கள் தொடர்பாக அவர்களின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கும் அதிகாரம் அரசமைப்புப் பேரவைக்கு இருக்கிறது.

அதற்காக அவர்கள் பெயர் குறிப்பிட்டு அனுப்பும் நபரைத்தான் பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும் என்பதில்லை.

ஜனாதிபதி தனக்கு விரும்பியவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் உயர் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும் போது அதனை வெளிப்படைத்தன்மையாக மேற்கொள்ள வேண்டும் என்பதற்கே அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி பெயர்களைப் பரிந்துரை செய்கிறார்.

அரசியலமைப்பு பேரவை பிரேரிக்கும் நபரை நியமிப்பதற்கும் நியமிக்காமல் இருப்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது.

அதனால் நாட்டை நிர்வகித்துச் செல்லும் ஜனாதிபதிக்கு அவருக்குப் பொருத்தமான ஒருவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுப்பார்.

மேலும் சில பதவிகளுக்கு நியமிக்கும் போது, அந்த நபர் குறித்த பதவிக்கு பொருத்தமானவரா? அதற்கான திறமை அவரிடம் இருக்கிறதா போன்ற விடயங்களையும் தெரிந்து கொண்டே பதவி வழங்க வேண்டி இருக்கிறது.

அதனால் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுபவர் தொடர்பாக அனைத்து தகுதிகளையும் கவனத்தில் கொண்டே ஜனாதிபதி புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்கவுள்ளார்.–என்றார்.



## குளித்துக் கொண்டிருந்தவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

**அம்பாறை மாயாதுன்ன பிரதேசத்தில் சம்பவம்**

அம்பாறை மாயாதுன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (06) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 42 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் தனது வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்த போது, சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நெல் வயலில் ஏற்பட்ட தகராறே துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவரை பிடிக்க பண்டாரதுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த ஓட்டோ நிறுத்தப்படாமையால் துப்பாக்கிச் சூடு!

**காயமடைந்த சாரதி வைத்தியசாலையில்**

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய மைதானத்துக்கு அருகில் இன்று அதிகாலை 3 மணியளவில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த ஓட்டோவை நிறுத்துமாறு பொலிஸார் சைகை செய்த போது, பொலிஸ் ஜீப் மீது அந்த ஓட்டோ மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இதனால் பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஓட்டோவில் பயணித்தவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான ஓட்டோவை நிறுத்துவதற்காக நடமாடும் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவின் அதிகாரி ஒருவரே துப்பாக்கியால் சுட்டார் என்று அந்தப் பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டின்போதுஓட்டோவில்பயணித்தவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சாரதி கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்











### கரையொதுங்கிய...

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுமாத்தளன் கடற்கரையில் பொதிகள் காணப்படுகின்றன என்று இன்று காலை 6.30 மணியளவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடற்கரைக்குச் சென்ற இராணுவத்தினர் கஞ்சாப் பொதிகளைக் கண்டிருந்தனர்.

இது தொடர்பாக இராணுவத்தினரால் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு பொலிஸார் குறித்த கடற்கரை பகுதியில் கரையொதுங்கிக் கிடந்த தலா 22 கிலோகிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளைக் கைப்பற்றினர்.

11 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்ட நிலையில் கடற்கரை பகுதி முழுவதும் மேலும் பொதிகள் ஒதுங்கியுள்ளனவா என்று பொலிஸார் சோதனை செய்வதுடன் மீனவர்களிடமும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகளின் பின்னர் கஞ்சாப் பொதிகள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### 14 நாள்களுக்கு...

மேன்முறையீட்டு நீதிமன்றம் அதனை 14 நாள்களுக்கு இடைநிறுத்தி இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் இலங்கை கிரிக்கெட் சபைக்கான இடைக்காலக் குழு நியமனம் தொடர்பான வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டது.

இலங்கை கிரிக்கெட்டுக்கு இடைக்காலக் குழுவை நியமிப்பதற்கான விளையாட்டுத்துறை அமைச்சரின் முடிவு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் இது குறித்து பேசப்பட்டது.

இதன்போது, இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஆராய 4 பேர் கொண்ட அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### உயர் நீதி...

மன்றத்தில் சிறப்பு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ இன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

எவ்வாறாயினும், சில சரத்துகள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் உத்தேச திருத்தங்களுக்கு உட்பட்டு, செயற்குழுவின் போது திருத்தப்பட்டால், இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் எளிய பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு உட்பட்டு சட்டமூலம் அல்லது அதன் விதிகள் எதுவும் அரசமைப்புக்கு முரணாக இல்லை என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

### நயினாதீவு...

இலங்கை மற்றும் சீனா பௌத்த நட்புறவு சங்கமும், சீனாவின் புத்த சங்கமும் இணைந்து சீனாவில் உள்ள பௌத்த மக்களால் இலங்கையிலுள்ள வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அனுப்பிவைத்துள்ளனர்.

இந்நிலையில், நயினாதீவு நாகவிகாரையில் இன்று நடந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

### 137 கிலோ...

காரைநகர் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றைக் கடற்படையினர் சோதனை செய்தபோது படகின் உள்ளே ஒரு மூடைக் கஞ்சாவும், கடலில் வீசப்பட்ட நிலையில் மேலும் இரு மூடைகளில் கஞ்சாவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மூன்று மூடைகளில் இருந்தும் மொத்தமாக 137 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கஞ்சா கடத்திய படகில் இருந்த கிளிநொச்சி, பூநகரியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### கிரிக்கெட்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நமது நாட்டில் கிரிக்கெட் விளையாட்டு அனைத்து அம்சங்களிலும் முன்னேற்றம் காண வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிரிக்கெட் விளையாட்டின் காரணமாக இலங்கை கிரிக்கெட் சபைக்குச் பெரும் செல்வம் சேர்ந்துள்ளது. எனவே, கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்யப் பலர் ஒன்றிணைவது இதனை நிர்வகிப்பதற்கா அல்லது இதற்குக் கிடைக்கும் பணத்தை அபகரிப்பதற்காக என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் சபை மிகவும் ஊழல் நிறைந்ததாக மாறியுள்ளது என்பது தெளிவாகின்றது. இந்தத் திருட்டுக் குகையில் உள்ள திருடர்களை வெளியேற்றி, தெளிவான முறையில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் திட்டத்திற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு வந்து, கிரிக்கெட் விளையாட்டை அரசியல் அற்ற தாக்கி நட்பு வட்டார சங்கங்களும் கேளிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

பிரபுக்கள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் கிரிக்கெட்டில் கிடைக்கும் பணத்தைத் திருடுகின்றனர்.

நாம் ஒருபோதும் நீதிமன்றத்தை விமர்சிக்கவில்லை. எனினும், கிரிக்கெட் தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவுகளில் கடுமையான சிக்கல்கள் உள்ளன. 220 இலட்சம் மக்களின் மனதில் குடிகொண்டுள்ள இந்த விளையாட்டுடன் நிறைவேற்று அதிகாரம், சட்ட மன்றம், நீதித்துறை, திருடர்கள் மற்றும் இலஞ்ச, ஊழல் மோசடிக்காரர்கள் சூழ்ச்சியாடுவதற்கு இடமளிக்க முடியாது.

கிரிக்கெட்டைத் திருடர்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்றால், அது வேறு உகந்த தீர்மானமாக இருக்க வேண்டும். இந்நாட்டில் கிரிக்கெட் சாம்பியனான திறமையான வீரர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறானவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தற்போது விளையாட்டுத்துறை அமைச்சரால் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு ஜனாதிபதியும் அவரது அடியாட்களும் கிரிக்கெட்டில் தலையீடு செய்ய ஆரம்பித்து விட்டனர். இவ்வாறான காரணங்களுக்காகவே நானும், எனது குழுவினரும் திருடர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க விரும்பவில்லை.

நீதித்துறையின் சுயாதீனத்துக்குக் கிரிக்கெட் திருடர்களால் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சர் எடுக்கும் எந்தவொரு சரியான முடிவுக்கும் நாம் துணை நிற்போம். தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கூட தேசிய அணிக்குள் நுழையும் வகையில் நிர்வாகம் மாற்றப்பட வேண்டும்.

அரசில் உள்ள ஏனையவர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இதற்குத் துணை நிற்க வேண்டும். இது ஒரு பெறுமதியான வளம் என்பதால், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அல்லாமல் தேசிய நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும்."

– என்றார்.

# வெயங்கொட வந்துரவ பிரதேசத்தில் மரங்கள் வீழ்ந்து 25 வீடுகள் சேதம்!




வெயங்கொட வந்துரவ பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்து 25 வீடுகள் சேதமடைந்துள்ளன. மக்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

ராஜாங்கனை, அங்கமுவ, கலாஓயா, உடவலவை, தப்போவ மற்றும் முருதவெல ஆகிய நீர்த்தேக்கங்களில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீஓயா, ஊறுபொகு ஓயா, உடவலவை ஓயா, கலா ஓயா, அத்தனகலு ஓயா மற்றும் நில்வலா கங்கை போன்றவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது என்று திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எஸ்.பி.சி.சுகீஸ்வர தெரிவித்தார்.

இதேவேளை, பதுளை, கண்டி, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு எச்சரிக்கை இன்று (07) வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று (06) பிற்பகல் வெயங்கொட வந்துரவ பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்து 25 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இன்று மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நுண்கடன் நிதி நிறுவனங்களால் 30 லட்சத்துக்கும் மேல் மக்கள் பாதிப்பு



நாட்டில் நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக 30 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும். இதனை தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியால் நேரடியாக கண்காணிக்கப்படும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று (06) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நுண்கடன் நிதி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன.

நுண்கடன்களை முன்னிலைப்படுத்திய தற்கொலைகள், முரண்பாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் சமூக கட்டமைப்பில் காணப்படுகின்றன.

நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தான் முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தும் சட்ட மூலம் எதிர்வரும் மாதமளவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

பதிவு செய்யாத நிறுவனங்கள் 05 லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். தண்டப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 5 வருடகால சிறைத் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

நுண்கடன் நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும்.

இதனை தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியால் நேரடியாகக் கண்காணிக்கப்படும்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் ஒரு வரலாற்று தவறு

நாட்டில் மக்களின் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தில் கை வைத்திருக்கின்றது ரணிலின் அரசு.

மக்கள் தமது ஒன்று கூடும் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் போன்றவற்றைக் கூட்டாகப் பிரயோகித்துத்தான் கோட்டாபயவின் கொடுங்கோல் ஆட்சியைத் துரத்தியடித்தனர்.

பெருமளவு மக்களின் ஆதரவு மற்றும் செல்வாக்குடன் அதிகாரத்துக்கு வந்த கோட்டாபயவின் அரசு அடக்குமுறை, ஊழல், மோசடி, தவறான நிர்வாகம் போன்றவற்றில் இறங்கியபோது - இரண்டே கால் ஆண்டிலேயே - அதே மக்களே தமக்குள்ள மேற்படி சுதந்திரங்களைப் பயன்படுத்தி அவரையே நாட்டை விட்டுத் துரத்தியடித்தனர் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். மக்களால் தேர்வு செய்யப்பட்டவருக்கே மக்கள் இந்தப் படிப்பினையைக் கொடுப்பார்கள் என்றால், பின் கதவால் அதிகாரத்திற்கு வந்த தமக்கு எதிராக மக்கள் திரும்புவதற்கு அதிக நேரம் எடுக்காது என்பதும் ரணிலுக்கு தெரியும்.

அதனால்தான் நேரத்துடனேயே அடக்குமுறைச் சட்டங்களையும் எதேச்சாதிகார நடவடிக்கைகளையும் விழுந்தடித்துக் கொண்டு அவர் முன்னெடுக்கின்றார்.

மக்கள் ஒன்று கூடவும், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தவும் தடை. தொழிற் சங்கங்களின் வாய்கள் அடைக்கப்பட்டுள்ளன. ஊடகங்களின் கருத்து வெளியிடும் சுதந்திரம் நசுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் கூட கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகும் நிலைமை.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை முழு அளவில் முன்னெடுப்பதற்காக ரணிலின் அரசு கொண்டு வந்த இணையவழி கட்டுப்படுத்தல் சட்டமூலம் தொடர்பில் தனது கருத்தை உயர்நீதிமன்றம் வெளியிட்டு விட்டது. அந்தச் சட்டமூலத்தின் மூல வடிவத்தில் உள்ள 30 ஷரத்துக்களை நிறைவேற்றுவதானால் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு பெற வேண்டுமென நீதிமன்றம் கருத்துக் கூறியுள்ளது. எனினும், உயர்நீதிமன்ற விசாரணையின் போதே அந்த ஷரத்துக்களை மாற்றியமைப்பதற்கான மாற்றுத் திட்டங்களை அரசு முன்வைத்துவிட்டது. ஆகவே திருத்தங்களுடன் அந்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்திற்கு வரப் போகின்றது. சாதாரண பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்றித் தனது அடக்கு முறையை ரணிலின் அரசு முன்னெடுக்கப் போகின்றது.

ரணிலின் அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கும் எம்.பிக்கள் இந்தச் சட்டமூலத்தை ஆதரிப்பதன் மூலம் நாட்டில் மிக மோசமான எதேச்சாதிகாரத்துக்கு - அடக்குமுறை ஆட்சிக்கு - மீண்டும் தாங்கள் துணை போகப் போகின்றனர் என்பதை மறக்கக்கூடாது. கோட்டாபயவின் அடக்குமுறை ஆட்சியை கண்முடித்தனமாக ஆதரித்து, வரலாற்றுத் தவறிழைத்த அதே எம்.பிக்கள் மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை இழைக்கப் போகின்றார்கள்.



## கண்ணில் பார்வை குறைவுக்கு ஐந்து நோய்கள்தான் காரணம்

### அவதானமாக இருக்குமாறு கண் வைத்திய நிபுணர் மலரவன் அறிவுரை

- எஸ். நிதர்ஷன் -

கண் பார்வை குறைவு ஏற்படுவதை தடுப்பதற்கு மக்கள் சில நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளவை வருமாறு–

கண்ணில் பார்வை குறைவு ஏற்படுவதற்கு முக்கியமாக ஐந்து நோய்கள்தான் இருக்கின்றன. வென்புரை, கண்ணாடி அணிதல், குளுக்கோமா, நீரிழிவ், வயது காரணமாக வருகின்ற விழித்திரு நோய். இந்த ஐந்து நோய்களும்தான் இலங்கையைப் பொறுத்தவரையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இந்தத் தாக்கங்களில் இருந்து விடுபட வேண்டும் என்றால் வாழ்க்கை நடைமுறைகளில் எங்களால் இயலுமானவற்றை நாங்கள் பின்பற்றுதல் வேண்டும். முக்கியமாக எங்களுடைய உணவு பழக்க வழக்கங்களில் நாங்கள் கூடுதலாகப் பழங்கள், மரக்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்தோடு நாளாந்தம் சன் லைட்டிங் அளவு கண்ணில் படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும், மூன்றாவது மாணவர்கள் மற்றும் அனைவரும் தங்களுடைய கற்றல் நேரத்தைக் குறைக்க வேண்டும்.

இந்த மூன்று நடைமுறைகளையும் நீங்கள் பின்பற்றினால் இனிவரும் காலங்களில் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள கூடியதாக இருக்கும்.

நான்காவது மிக முக்கியமானது. தற்போது நடைமுறையில் இல்லை என நினைக்கிறேன். ரத்த உறவு திருமணத்தை இயலுமானவரை குறைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் கால நிலை மாற்றங்களும் இந்த கண் நோய்களைக் கூட்டிக் கொண்டே போகும் என்று கூறுகின்றார்கள். இதனால் காலநிலை மாற்றங்களுக்கும் நாங்கள் உதவி செய்ய வேண்டி இருக்கின்றது.

இந்த ஐந்து விடயங்களும் மிக முக்கியமான விடயங்கள். இது அனைத்தும் செய்யக் கூடிய விடயங்களாக இருக்கின்றன. இதன் மூலம் பொதுவாக ஏற்படுகின்ற கண் நோயின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.– என்றார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை-2023

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."

\- பிராங்க் லோயிட் றைற்
(அமெரிக்க கட்டிடக் கலைஞர்இ எழுத்தாளர்)

# சம்மாந்துறையில் திருட்டுகள் அதிகரிப்பு; மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்!

## சம்மாந்துறை பொலிஸார் அறிவுறுத்து



(பாரூக் சிகான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் அதிகரித்துவரும் களவு திருட்டு தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொது மக்களுக்குச் சம்மாந்துறை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்துள்ளவை வருமாறு–

இந்தப் பிரதேசத்தில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாடுகள் அதிகமாக களவாடப்படுகின்றன.

இவ்வாறு களவாடப்படும் மாடுகள் வெட்டப்பட்டுப் பங்கு இறைச்சியாக விற்பனை செய்யப்படுகின்றன .

ஆகவே பொது மக்கள் தங்களுக்கான இறைச்சியை கடைகளில் பெற்றுக் கொள்வதே சிறந்தது.

பங்குகளுக்காக வெட்டப்படும் மாடுகளில் அதிகமானவை களவாடப்பட்ட மாடுகளாகவே உள்ளன.

இது சம்பந்தமாகப் பொலிஸாருக்கு அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.மாடுகளை வைத்திருப்போர் அவதானமாக இருக்க வேண்டும்.

மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அருகில் இருக்கும் அயல்வீட்டு உறவினரிடம் சொல்லி விட்டே செல்கின்றனர். சில நேரங்களில் அதை முகநூலிலும் பதிவிடுகின்றனர்.

இந்த நிலையில் திருடர்களுக்கு அது வசதியாக அமைந்து விடுகின்றது.

அவ்வாறான வீடுகளை இனங்கண்டு திருட்டு சம்பவத்தில் ஈடுபடுகின்றனர்.

வயல் வேலைகளில் ஈடுபடுவதற்காக செல்வோர் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்தும் போது பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

சம்மாந்துறை பிரதேசத்தில் இவ்வாறான குற்றச்செயலில் அதிகமாக போதைபொருள் பாவனையில் உள்ளோரே ஈடுபடுகின்றனர்.

எனவே இரவு நேரத்தில் உங்களுடைய பிரதேசங்களில் சந்தேகத்துக்கு இடமாக யாரும் நடமாடினால் உடனடியாக சம்மாந்துறை பொலிஸாருக்குத் தெரியப்படுத்துங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் நிலைமை!

## வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ அறிவுறுத்து

இலங்கையில் சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சுகாதார விஞ்ஞானப் பிரிவின் போசாக்கு அலகு பிரதானி வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ பொது மக்களுக்கு இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

இலங்கையில் சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் உடல் எடை அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

அநேகமான மாணவ, மாணவியர் சந்தையில் விற்பனை செய்யப்படும் முறுக்கு, வடை, ரோல்ஸ், பெட்டிஸ், டோனட், கேக் உள்ளிட்ட உணவு வகைகளை உட்கொள்கின்றனர்.

சீனி, எண்ணெய் போன்றன அதிகளவில் செறிவான உணவுப் பொருள்களை உட்கொள்வதால் சிறு வயதிலேயே பாரிய ஆபத்துகளை எதிர் நோக்க நேரிடுகிறது.

குறைந்த வயதிலேயே சிலருக்கு மாரடைப்பு, நீரிழிவு நோய்கள் ஏற்படுகின்றன.

பிள்ளைகள் எண்ணெய் மற்றும் சீனி செறிந்த உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.– என்றார்.



# அக்கரைப்பற்றில் பிரார்த்தனை மண்டபம் திறப்பு








- வி.ரி.சகாதேவராஜா -

அக்கரைப்பற்று அம்மன் இல்லத்தில் பிரார்த்தனை மண்டபம் புதிதாக திறந்து வைக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அங்கு விசேட பூஜை பிரார்த்தனை நிகழ்த்தி பிரார்த்தனை மண்டபத்தை திறந்து வைத்தார் .

வேறிடத்தில் இயங்கி வந்த அம்மன் அறநெறி பாடசாலையும் இதே மண்டபத்தில் இயங்கவுள்ளது. அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வையும் சுவாமிகள் செய்து வைத்தார்.

இல்லத் தலைவர் கே. வாமதேவன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன.

# ஆசிரியை தாக்கிய மாணவன் வைத்தியசாலையில் அனுமதி!

- பொகவந்தலாவ நிருபர் -

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தின் தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவரை ஆசிரியை ஒருவர் தடியால் தாக்கிய நிலையில், காயமடைந்த மாணவன் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது–

தரம் 4 வகுப்பில் நேற்று (06) திங்கட்கிழமை ஆங்கில பாடம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை அருகில் உள்ள மாணவன் தாக்கப்பட்ட மாணவனோடு கதைத்துள்ளார்.

இதனால் இந்த மாணவன் தாக்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



தாக்குதலுக்கு உள்ளான 9 வயது சிறுவனுக்கு வலது கை மற்றும் உடம்பின் பின் பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சிறுவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சு, மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர், ஹட்டன் வலய கல்வி பணிமனை ஆகியோருக்கு சிறுவனின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் தாக்கப்பட்டமைக்கு சிறுவனை தாக்கிய ஆசிரியையும் பாடசாலையின் அதிபரும் பொறுப்புகூறவேண்டும்என்றுபெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுவன் மீது தாக்குதல் நடத்திய ஆசிரியையை கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பூகோளமயமாதலும் பண்பாட்டு மாற்றங்களும்

உலகில் வெவ்வேறு பாகங்களிலும் இடம்பெறக் கூடிய மாற்றங்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த விடயங்களை ஓரிடத்திலிருந்தே அறிந்துக் கொள்ளக் கூடிய வகையில் பூகோளமயமாதல் முழு உலகையும் தன் வசப்படுத்தியுள்ளது.

இன்றைய நவீனமயமான உலகில் பூகோளமயமாதல் எனும் பதம் சகல விடயங்களிலும் பரந்து வியாபித்துள்ளது. கோளமயமாதல், பூகோள கிராமம், உலகமயமாதல், அகிலமயமாதல் எனப் பல்வேறு பதங்களால் பூகோளமயமாதல் குறிக்கப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமே பூகோள மயமாதலின் செயற்பாடுகளில் பெரும் செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது.

உலகமயமாதல் என்னும் சொல்லினுடைய கருத்தாக்கமே பூகோளமயமாதலாகும். பூகோள மயமாதலின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1981 ஆம் ஆண்டு காலப் பகுதியிலே பொருளாதாரத் துறை சார்ந்ததாகவே பூகோளமயமாதல் எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டுள்ளது.

“தியோடோர் டேவிட்” என்பவரின் “சந்தைகளில் பூகோளமயமாதல்” எனும் நூலிலும் கூட பொருளாதாரத்துறைச் சார்ந்த அம்சம் ஒன்றாகவே பூகோள மயமாதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

“நவீன காலத்தில், ஆரம்ப காலங்களில் இருந்ததை விட அதிக நடைமுறை சாத்தியமானதாகவும்` உடனடியாக நிகழ்வதாகவும் பெருமளவில் தெரியக் கூடியதுமான உலகத் தொலைத் தொடர்பு பெருக்கம் மற்றும் பூகோள சந்தை எல்லையின் பெருக்கத்தையு மேபூகோளமயமாக்கம்” என ப்டெ-டரிக் ஜேம்சன் வரையறைச் செய்துள்ளார்.

**பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம் மற்றும் கலாச்சாரம் என்பவற்றின் பிணைப்பினூடாக உலக மக்கள் நெருக்கமடைந்துள்ளனர். அத்துடன் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையும் அதிகரித்துள்ளது.**

பூகோளமயமாதலால் முழு உலகமும் உள்ளங் கைகளில் சுருங்கிப் போயுள்ளது என்பதன் அர்த்தமானது, உலகம் தனது பருமனில் சுருங்குகின்றது என்பதல்ல. அதற்கு மாறாக உலக மக்கள் பல்வேறு விடயங்கள் குறித்து ஒருவருக்கொருவர் நெருக்கம் அடைந்துள்ளனர் என்பதேயாகும்.

இதனோடு பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம் மற்றும் கலாச்சாரம் என்பவற்றின் பிணைப்பினூடாக உலக மக்கள் நெருக்கமடைந்துள்ளனர். அத்துடன் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையும் அதிகரித்துள்ளது.

பூகோளமயமாதலை பொருளாதார பூகோளமயமாக்கம், சமூக பூகோளமயமாக்கம், தொழிநுட்ப பூகோளமயமாக்கம் என வகை பிரித்து நோக்கப்படுகின்றது.

பூகோளமயமானது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரம் மற்றும் தொடர்பாடல் என்று அனைத்துத் துறைகளிலும் தனது பாரிய செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. பண்பாட்டில் பூகோளமயமாதல் ஏற்படுத்திய தாக்கமானது உலக மக்கள் அனைவரையும் ஒரே பண்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கின்றது.

பூகோள மயமாதலால் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்கவியலாத உண்மையாகும். உலக வாழ் மக்களின் உணவு, உடை, அழகு சாதனப் பொருள்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக வலைத்தளங்கள் என்று அனைத்து துறைகளும் நவீன மயமாக்கலுக்கு உட்பட்டு மாற்றமடைந்து வந்துள்ளன.

ஒவ்வொரு இன, மத, சமூகத்துக்கும் உரிய தனித்துவமான பண்பாட்டு அம்சங்களுடன் பூகோள மயமாதலின் செல்வாக்கால் நவீன யுகத்தைப் பிரதிபலிக்கும் அம்சங்கள் பாரம்பரிய அம்சங்களுடன் இணைந்து மக்களின் பண்பாட்டை மாற்றியமைத்துள்ளன.

பூகோள மயமாதலின் பின்னர் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் கலாச்சார பரவல், கலாச்சார வளர்ப்பு, கலாச்சார பேரரசு வாதம், கலாச்சார கலப்பினமாக்கல், கலாச்சார ஒத்திசைவு, கலாச்சார தேசியவாதம் என்று வகைப் படுத்திக் குறிப்பிடலாம்.

உலகவாழ் மக்களின் உடை, உணவு, உறையுள் போன்ற அடிப்படை அம்சங்கள் முதல் தமது செல்வாக்கைப் பூகோள மயமாதல் ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய உலகில் மக்களின் ஆடை, அணிகலன்களில் நவீன கலாச்சாரத்தின் புதிய போக்குகள் உள்வாங்கப்பட்டுள்ளன. தற்பொழுது பிரபல்யம் அடைந்துள்ள ‘ஜீன்ஸ்’ கலாச்சாரம் உட்பட பல நவீன ஆடைகளின் கலாச்சாரம் பாரம்பரிய ஆடைகளின் கலாச்சாரத்தை வெகுவாக மாற்றியமைத்துள்ளன. உடை மட்டுமல்லாது உணவிலும் கூட பூகோளமயமாதலின் துரித செல்வாக்கால், இன்று மக்கள் மத்தியில் உடனடி உணவு எனும் அம்சம் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பூகோளமயமாதலும் பண்பாட்டு மாற்றங்களும்

(ஒன்பதாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியோடு உலகில் தமது பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக உண்ணப்படுகின்ற உணவுகளும் இன்றளவில் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

வரம் வேண்டி நிற்கும் மனிதனிடம் வந்து சேரும் கடவுள் போல உடனடி உணவுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக எமது பாரம்பரியத்தைப் பிரதிபலித்த கலாச்சார உணவுகள் மற்றும் போஷாக்கு மிகுந்த உணவுகளை உட்கொண்டு வாழ்ந்து வந்த மனிதன் தற்பொழுது உடனடி உணவுகளைப் பிரபல்யமான உணவகங்களில் உண்பதற்கு வேட்கை கொண்டுள்ளான். இதனோடு சிறுவர்கள் முதல் முதியோர்கள்வரை வயது வேறுபாடுகளின்றி உடல் நலத்தைப் பாதிக்கக் கூடிய பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை அதிகமாகக் கொள்வனவுச் செய்து அவற்றை உண்பதிலேயே அதிக விருப்பத்தைத் வெளிப்படுத்தி வருகின்றனர். ,



இவ்வாறு பூகோளமயமாதலானது மனித வாழ்க்கையின் சகல விடயங்களிலும் தனது முழு ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை மனிதர்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்வதில் ஆர்வம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். இன்று இயற்கையான அழகு சாதனப் பொருள்களைக் காட்டிலும் மனிதர்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான சகல விதமான அழகுசாதனப் பொருள்களையும் தாமே செயற்கையாகத் தயாரித்து அவற்றையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றார்கள்.


இதனோடு இளைஞர் யுவதிகள் தமது அழகை மேம்படுத்தும் வகையில் செயற்கையாகத் தயாரிக்கப்படும் இரசாயனக் கலவை கலந்த அழகுச் சாதனப் பொருள்களைப் பயன்படுத்தித் தமக்குத் தாமே உடல்நலத்துக்குத் தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.

பூகோளமயமாதலால் பல பாதக விளைவுகள் உலகில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுதான் உள்ளன.

பூகோளமயமாதலின் சாதக அம்சங்களை பயன்படுத்துவதோடு அவற்றால் ஏற்படக் கூடிய பாதகங்களை மனிதர்களாகிய எம்மால் முற்றாக அழித்துவிட இயலாது. எனினும் மட்டுபடுத்த இயலும்.

நவீன உலகில் பூகோளமயமாதல் எவ்வாறான செல்வாக்கை ஏற்படுத்தி பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் பகுத்தறிவுக் கொண்ட மனிதர்களாகிய நாம் எம்முடைய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை பேணிப் பாதுகாத்து எமது அடுத்த சந்ததியினருக்கு கடத்துவதே எமது தலையாய கடமையாகும்.

**சுப்ரமணியம் காயத்திரி,**
**( ஊடகக் கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்)**



# அமைச்சரின் பெயரைக் கூறி காணிகளை நிரப்பியோர் கைது!

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பெயரைப் பயன்படுத்தி கலல்கொட பிரதேசத்தில் அனுமதியின்றி காணிகளை நிரப்பிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலவத்துகொட, கலல்கொட பிரதேசத்தில் சட்டவிரோதமாக காணி சுவீகரிப்பு இடம்பெறுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு நேற்று (06) தகவல் கிடைத்தது.

இதன்படி, இந்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் விசேட அமுலாக்கப் பிரிவுக்குத் தலைவர் அறிவித்திருந்தார்.

இதன்படி அங்கு சோதனை பிரிவினர் அவசர சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் விசேட அமுலாக்கப் பிரிவினர் அங்கு சட்டவிரோதமாக காணிகளை நிரப்பி வந்த இருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களுடன் டிப்பர் இயந்திரம் மற்றும் மண் அகழ்வு இயந்திரம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கெக்கிராவ பிரதேசத்தை சேர்ந்த 53 வயதான ஒருவரும் மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுடன் வாகனங்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் விசேட அமுலாக்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டம் திருமலையில்

**- ஹஸ்பர் -**

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்டத்தில் "சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் "எனும் தொனிப்பொருளில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிராம மட்டத்திலான சிறுவர்கள், இளையோர்கள் மற்றும் கிராம மட்டத்திலான பெரியவர்கள், அருட்சகோதரிகள், மற்றும் சமூக பங்காளர்கள் இணைந்து நேற்று (06) உப்புவெளி பிரதேசத்தில் உள்ள கடற்கரையில் சிரமதானம் செய்தனர்.

இதில் 200 இற்கும் அதிகமானோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி. கலாநிதி டீ.போல் றொபின்சன் தலைமையிலும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களது ஒத்துழைப்புடன் நடைபெற்றது.



# சட்டத்தின் ஆட்சி தொடர்பில் அறிவூட்டல் செயலமர்வு!





**- எஸ்.கீதபொன்கலன் -**

சட்டத்தின் ஆட்சிக்கான மன்றம் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலுடன் சட்டத்தின் ஆட்சி தொடர்பிலான அறிவூட்டலை வழங்குவதை பிரதான நோக்காகக் கொண்டு மூன்று நாள் செயலமர்வை நடத்தியுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள் அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு திருகோணமலையில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பசில் பெனாண்டோ செயலமர்வில் பிரதான உரையை ஹொங்கொங் நாட்டிலிருந்து இணைய காணொளி மூலம் நிகழ்த்தினார்.

"ஊழலும் மக்கள் பிரச்சினைகளும்" என்ற தொனிப்பொருளில் செயலமர்வின் உரைகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

20 பொது மக்கள் அமைப்புகள் மற்றும் ஊடக அமைப்புகளின் 32 பேர் இந்தச் செயலமர்வில் பங்கெடுத்தனர்.

நிகழ்வை சட்டத்தின் ஆட்சிக்கான மன்றத்தின் பணிப்பாளர் இனோமா கருணாரத்தன நெறிப்படுத்தினார்.





# பிராந்திய பணிப்பாளர் தலைமையில் குழுவினர் பொத்துவில் ஆஸ்பத்திரிக்கு!

- றியாஸ் ஆதம் -

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி அமைப்பதற்கான இடங்களையும், அங்கு இடம் பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளையும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான குழுவினர் நேற்று (06) பார்வையிட்டனர் .

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஐ.எம்.றஹிம் மற்றும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள கலந்து கொண்டனர்.

தற்போது பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சீன அரசின் நிதியுதவில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக் கட்டிடம் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட கட்டடத் தொகுதி என பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

# றக்காமம் பிரதேச செயலகத்தில் பொது மக்கள் சேவை பணியகம்!



- நூருல் ஹுதா உமர் -

இறக்காமப் பிரதேச செயலகத்தில் பொது மக்களுக்கு கிடைக்குப் பெறும் சேவைகளை மிக எளிதாகவும், துரிதமாகவும், நேர விரயமின்றியும் பொது மக்கள் தங்களது சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கான பல்வேறுவகையான துரித வேலைத் திட்டங்கள் பிரதேச செயலர் எம்.எஸ்.எம்.றஸான் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் முதல் கட்டமாகப் பொது மக்கள் தங்களது சேவைகளைத் துரித கதியிலும், வினைத் திறனாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில், பொது மக்கள் சேவைப் பணியகம் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் இதனை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கணக்காளர் திருமதி பாத்திமா றிம்ஷியா அர்ஷாட், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம். முஹம்மட் தௌபீக், நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி.என். யசரத்ன பண்டார, சமுர்த்தி தலைப்பீட முகாமையாளர் ஏ.எல்.நௌபீர், காணி உத்தியோகத்தர் என்.எல்.எம்.மாஹீர் உட்பட கிளைத் தலைவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பணியகத்தில் பரீட்சை கட்டணங்கள் செலுத்துதல், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், வாகன அனுமதிப் பத்திரம் வழங்கல், வாகன உரிமை மாற்றம், வருமானச் சான்றிதழ், கால்நடைகள், போக்குவரத்து அனுமதி பத்திரம், மஹாபொல உதவித் தொகை போன்ற பல சேவைகளை பொது மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சாய்ந்தமருது காரியப்பர் வித்தியில் அலங்கரிக்கப்பட்ட வகுப்பறைகள்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் கவின் கலையுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட வகுப்புக்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை புதன்கிழமை (08) காலை 08.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும்.

பாடசாலையின் ஆரம்ப நெறி ஆசிரியர்களால் அந்த வகுப்பு மாணவர்களுடைய பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆசிரியைகளின் சொந்த நிதியிலிருந்தும் ஆரம்ப நெறி வகுப்பறைகளை மிகவும் சிறப்புடன் கவின் கலையுடன் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்ற கலை உணர்வுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ். எம். ஆரிப் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஆசிரிய ஆலோசகர்களான யூ.கே. அன்சார், எம்.எம்.எம். றபீக், முன்னாள் ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹ்ரூன், பாடசாலையின் ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபித், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நாஸர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், ஊடகவியலாளர் எம்.எஸ்.எஸ்.ஸாகிர் ஆகியோர் கலந்து கொள்வர்.

பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் கலாசார விழுமியங்கள் அடங்கிய தேவைப்பாடுகள் பாடசாலையில் உள்ளது என்றும் தனவந்தர்கள் மற்றும் பரோபகாரிகளின் உதவிகளை பாடசாலை எதிர்பார்த்து நிற்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாற்றுத்திறனாளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வு

- ஹஸ்பர் -

கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச செயலகம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றுள்து.

இந்த நிகழ்வில் வளவாளராக கால்நடை வைத்திய அதிகாரி எம்.ஏ.எல். ரத்தீபா ஆரோக்கியமான உணவு முறைகள் பற்றியும் அதனை எவ்வாறு செய்வது தொடர்பான செய்முறை விளக்கம் அளித்தார்.

மாற்றுதிறனாளி பிள்ளைகளுடன் பெற்றோர்களுக்கு ஏற்படும் சவால்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்பட்டது. கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர் பேரின்ப சிவம் கால்நடைகளை பாதுகாப்பது தொடர்பாக விளக்கமளித்தார்.

நிகழ்வில் அங்கவீனமுற்ற தேசிய செயலகத்திலிருந்து சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட உளவள துணை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மூன்று நூல்கள் வெளியீடு!



- வி.ரி.சகாதேவராஜா -

பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றத்தின் ஏற்பாட்டில் முப்பெரு நூல் வெளியீட்டு விழா கடந்த (4) சனிக்கிழமை மன்ற மண்டபத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வே.ஜெகதீசன், கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ச. நவநீதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இங்கு சரவணமுத்து கணேசமூர்த்தி கவிஞர் சரவணன் எழுதிய 'உயிர்ப்பின் முகவரி' சிறுகதை தொகுப்பு நூல், திருமதி தனலட்சுமி முரசொலிமாறன் எழுதிய "அரசியல் சமூகவியல் அறிமுகமும்" ஆய்வு கட்டுரை தொகுப்பு நூல், சரவணமுத்து நரேந்திரன் விவேக வெளி தமிழேந்திரன் எழுதிய "தாயுன் தமிழும்", கவிதை தொகுப்பு நூல் ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

இதற்குஜேர்மன்தமிழருவிவானொலியினர், சென்னை தமிழியல் ஆய்வு மையத்தினர், கவிஞர் முனைவர் கோ.மோகனரங்கன் ஆகியோரது அனுசரணை கிடைத்தது.

நிகழ்வில் இலக்கிய அதிதியான பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# கிழக்கு நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்வு; கடலில் நீராடுவதைத் தவிர்க்க வலியுறுத்து!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது பரவலாக அதிக மழை பெய்து வருகின்றது.

இதனால் மாகாணத்திலுள்ள நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் மற்றும் குட்டைகள் என்பவற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது.

எனவே,பொது மக்கள் நீரேந்து பிரதேசங்களில் மிக அவதானமாக முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேண்டத்தகாத உயிரிழப்புகள் மற்றும் ஏனைய அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் நீராடி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கிழக்கில் கடந்த காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளத.

கிழக்கு மாகாணத்துக்கு வெளி மாகாணங்களிலிருந்து வருகை தருபவர்கள் நீரேந்து பகுதிகளில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் அறிவித்துள்ளது.




# தாறுல் இல்ம் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கல்!

- எம். எப். நவாஸ் -

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒலுவில் அக் – தாறுல் இல்ம் வித்தியாலயத்துக்கு தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள், பொது மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் என்பன இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ. எல் . ஹாரூன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாறுக் புர்கி கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்.



நிகழ்வில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷாரப், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி எம்.ஜே.எம்.அஷ்ஹர் மற்றும் பாடசாலை சமூகத்தினர், பெற்றார் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தான் தூதுவருக்கு பாடசாலை அதிபரால் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.



# முல்லை. கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு விழா!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் கலாச்சார பேரவை இணைந்து நடத்தும் 2023 ஆம் ஆண்டுக்கான கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருமதி உமா மகள் மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற பிரதேச பண்பாட்டு விழாவில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) கனகசபாபதி கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சிவபாலன் குணபாலன், முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சந்திரசேகரன் ஜசிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு ஆரம்பமான நிகழ்வில் கரைத்துறைப்பற்று பிரதேச கலைஞர்களுடைய பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.







# அக்கரைப்பற்று பிரதேச செயலக தோட்டத்தில் அறுவடை விழா!






- எம். எப். நவாஸ் -

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் தோட்டத்தில் அறுவடை விழா நேற்று இடம்பெற்றது.

விளைந்த காய்கறிகளை பிரதேச செயலர் ரீ.எம்.எம்.அனசார் அறுவடை செய்தார். இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் றாசித் யஹியா, கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்சா, மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST
FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882

## மலையகத் தமிழர்கள் விழா:

# பங்கேற்க முடியாமல் போனதற்கு மத்திய அரசு தான் காரணம்!

## - தமிழக நிதியமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் நடைபெற்ற மலையக தமிழர்கள் விழாவில் பங்கேற்க முடியாமல் போனதற்கு மத்திய அரசு தான் காரணம் என தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றம் சாட்டியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே மல்லாங்கிணற்றில் தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கொழும்புவில் கடந்த 2 ஆம் திகதி மலையக தமிழர்கள் தோட்டப் பணிகளில் தங்களது உழைப்பை கொடுத்த நாட்களை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்படும் விழாவில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் முதல்வருக்கு பதிலாக அரசு பிரதிநிதியாக என்னை கலந்துகொள்ள சொல்லியிருந்தார். இதுகுறித்து விழா ஏற்பாட்டாளர்களுக்கும் முறைப்படி தெரிவித்தோம்.

இலங்கை பயணம் மேற்கொள்வதற்காக மத்திய அரசின் வெளிவிவகார துறையில் இருந்து உரிய அனுமதி பெறுவதற்கு கடந்த மாதம் 28 ஆம் திகதி உரிய வழிமுறைப்படி விண்ணப்பம் பொதுத்துறையால் அனுப்பப்பட்டுவிட்டது. அதற்கு பின்னர் விழா ஏற்பாட்டாளர்களிடம் நான் தொடர்பு கொண்டு எனது பயண விவரங்களை அவர்களுக்கு வழங்கினேன்.

பயணத்திற்கு வேண்டிய விமான டிக்கெட்டு உள்ளிட்ட எல்லாம் ஏற்பாடுகளை செய்துவிட்டு, வெளிவிவகாரத் துறையின் அனுமதி கிடைப்பதற்காக காத்துக் கொண்டிருந்தேன்.

ஆவணங்கள் அனைத்தும் கடந்த மாதம் 28 ஆம் திகதி பொதுத்துறை வாயிலாக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டன. அந்த விழா 2 ஆம் திகதி மதியம் இடம்பெற்றது . ஆனால் 1 ஆம் திகதி இரவு ஒன்பது மணிவரை அதற்கான அனுமதி மத்திய அரசின் வெளிவிவகார துறையிடம் இருந்து வரவில்லை. நான் அன்றைய தினம் ஏறத்தாழ எட்டு, எட்டரை மணிவரை தலைமை செயலகத்தில் தான் இருந்தேன். தலைமை செயலகத்தில் இருக்கக்கூடிய அதிகாரியிடத்தில் அதற்கான ஒப்புதல் வந்துவிட்டதா என்று விசாரித்தபோது இதுவரை வரவில்லை என்று தெரிவித்தார்.

அதற்குப்பின்னர் நான் அதிகாரிகளிடம் கேட்டு, இதற்கு பிறகு அத்தகைய அனுமதி கடிதம் வருவது கடினம் என்ற சூழ்நிலையில் ஏற்பட்டது. இதனையடுத்து இலங்கையில் இருக்கக்கூடிய விழா ஏற்பாட்டாளர்களை அழைத்து, சூழ்நிலையை அவர்களிடத்தில் விளக்கினேன்.

அத்துடன், என்னுடைய பயண ஏற்பாடுகளை ரத்து செய்துவிட்டு வீடு திரும் பினேன். அதற்கு பின்னர் ஒன்பதரை மணிக்கு மேல் அனுமதி வந்திருக்கிறது.

2 ஆம் திகதி காலை 11 மணிக்கு இலங்கையில் இருந்து தொடர்பு கொண்டார்கள். அவர்கள், தமிழ்நாடு அமைச்சரும் வரமுடியாத காரணத்தால் முதல்வரின் வாழ்த்துச் செய்தியை அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை கருதி உடனடியாக முதல்வர் நேரம் ஒதுக்கி அதற்கான வாழ்த்துச் செய்தியும் உடனடியாக தயார் செய்து அங்கு அனுப்பி வைத்துவிட்டார். அந்த வாழ்த்துச் செய்தி இங்கிருந்து பகல் 2 மணிக்குள் அவர்களுக்கு கிடைத்துவிட்டது.

அந்த நிகழ்ச்சியில் முதல்வருடைய வாழ்த்துச் செய்தி ஒளிபரப்பப்படும் என்று அவர்கள் சொன்னார்கள்.

அங்கே இருக்கக்கூடிய பல்வேறு செய்தி ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், என்ன காரணத்தினாலோ முதல்வருடைய வாழ்த்துச் செய்தி அந்த கூட்டத்தில் அவர்களால் ஒளிபரப்பப்படவில்லை.

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் தமிழ்நாட்டில் இருந்தும், இந்திய அளவிலும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறார்கள்.

ஆனால் என்ன காரணத்தினால் முதல்வருடைய வாழ்த்துச் செய்தி அங்கே ஒளிபரப்ப இயலவில்லை என்பது எனக்கு தெரியவில்லை. யாரையும் நான் நேரடியாக சொல்லவிரும்பவில்லை. காரணத்தை உங்களுடைய யூகத்திற்கு விட்டுவிடுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் நிலவிய மோசமான வானிலை காரணமாக சென்னை - கொழும்பு பயணிகள் விமான சேவை ரத்து




இலங்கை பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக சென்னை-கொழும்பு பயணிகள் விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் வழக்கமாக அதிகாலை ஒரு மணிக்கு கொழும்புவிலிருந்து புறப்பட்டு, 2 மணிக்கு சென்னை சர்வதேச விமான நிலையம் வந்தடையும். அதே விமானம் மீண்டும், சென்னை விமான நிலையத்திலிருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு, 4 மணிக்கு கொழும்பை சென்றடையும். இந்த நிலையில், இலங்கையில் நிலவிய மோசமான வானிலை காரணமாக இந்த விமானசேவை ரத்து செய்யப்பட்டுள்ளது என விமான நிறுவ னம் அறிவித்துள்ளது.

இதனால், இந்த விமானங்களில் பயணம் செய்ய இருந்த பயணிகள், இன்று காலை 7.30 மணிக்கு கொழும்பிலிருந்து சென்னை புறப்படும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்திலும், சென்னையிலிருந்து காலை 9.50 மணிக்கு கொழும்புக்கு புறப்படும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்திலும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரு விமான சேவைகள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

# குழந்தைகளின் மயானமாகிறது காசா: உடனடியாகப் போரை நிறுத்துங்கள்!

## - ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள்



காசா குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஒரு மாதத்தைக் கடந்துவிட்டது. 4100 குழந்தைகள், 2640 பெண்கள் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசாவில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அந்தப் பிராந்தியமே குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த காசாவையும் சுற்றிவளைத்து விட்டதாகவும் வடக்கு, தெற்கென்றில்லாமல் காசாவை இரண்டாகப் பிரித்து தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தது.

இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1400 பேர் பலியாகியுள்ளனர். 200 இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாக ஹமாஸ்வசம் உள்ளனர்.

இந்த நிலையில், மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தம் செய்ய சர்வதேச அமைப்புகள், உலக நாடுகள் பலவும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்த சூழலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்தம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார். அதில் அவர், மனிதாபிமான உதவிகள் காசாவுக்குள் சென்று சேர்வதை உறுதி செய்யவும், பணயக் கைதிகள் பத்திரமாக வெளியேற வழிவகுக்கவும் காசாவில் அவ்வப்போது சரியாக திட்டமிட்டு தாக்குதலை நிறுத்துவது பற்றி பரிசீலிப்போம்.

ஆனால் ஏற்கெனவே கூறியபடி போர் நிறுத்தம் என்பதற்கு வாய்ப்பில்லை. போர் முடிந்த பின்னர் காசாவை முழுக் கட்டுப்பாட்டுக்குள் சில காலம் எடுத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொறுப்பு இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனர்களைக் கொல்வதற்கு இஸ்ரேலை அமெரிக்கா ஊக்குவிக்கிறது!

## - ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு



காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனர்களைக் கொல்ல இஸ்ரேலை அமெரிக்கா ஊக்குவிக்கிறது என ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி குற்றம்சாட்டியுள்ளார்.

காசாவில் ஒரே மாதத்தில் 3 ஆவது முறையாக தொலைத்தொடர்பு முடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் அண்டனி பிளிங்கன் நேற்று இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரைப்பகுதிக்கு திடீர் பயணம் செய்தார். பின்னர் அவர் பாலஸ்தீன ஜனாதிபதி மஹமூத் அப்பாஸை சந்தித்தார். காசா மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படக் கூடாது என்று அமெரிக்க அமைச்சர் பிளிங்கன் வலியுறுத்தினார்.

இந்த நிலையில், தெஹ்ரானில் செய்தியாளர்களிடம் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி கருத்து தெரிவிக்கையில், காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன மக்களைக் கொல்லவும், கொடூரமான கொடூரமான செயல்களை செய்யவும் இஸ்ரேலை அமெரிக்கா ஊக்குவிக்கிறது.

குண்டுவெடிப்புகள் விரைவில் நிறுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தம் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். ஒடுக்கப்பட்ட காசா மக்களுக்கு உதவிகள் செய்யப்பட வேண்டும். மனிதகுலத்துக்கு எதிரான இந்தக் கொடூரமான குற்றங்கள் அனைத்தும் ஓர் இனப் படுகொலை. இது அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் சியோனிச ஆட்சியால் நடத்தப்படுகிறது என்று குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய உலகம் ஒன்றிணைய வேண்டும். இஸ்லாமிய நாடுகள் ஒற்றுமையாக இருந்திருந்தால் இஸ்ரேல் இன்று இதுபோல் காசாவில் குண்டுமழை பொழிந்திருக்க முடியாது என்றும் ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.